தினமணி

மேட்டூர் அணையை காலம் கடந்து பாசனத்துக்கு திறப்பதால் பயன் இல்லை

First Published : 16 Jun 2010 12:00:00 AM IST



கடலூர், ஜூன் 15: மேட்டூர் அணையைக் காலம் கடந்து திறப்பதால் பயன் இல்லை. இந்த மாதமே திறக்க வேண்டும் என்று டெல்டா விவசாயிகள் கருதுகிறார்கள்.

÷மேட்டூர் அணையில் இருந்து கிடைக்கும் காவிரி நீரைக் கொண்டு தமிழகத்தில், சுமார் 16.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள். 1972க்கு முன்பு வரை ஜூன் 12-ல், மேட்டூர் அணை திறக்கப்பட்டு டெல்டா பகுதிகளில் சுமார் 5 லட்சம் ஏக்கர் நிலங்களில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

÷காவிரி நீர் பிரச்னை தொடங்கிய பின்னர், கர்நாடக அரசு தனது அணைகளில் தேக்கி வைத்த நீர் போக, வழிந்தோடும் உபரிநீர்தான் தமிழகத்துக்கு வழங்கி வருகிறது. இதனால் தமிழகத்தில் குறுவை சாகுபடி முற்றிலும் தடைபட்டு, 16.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் சம்பா சாகுபடி மற்றும் ஆண்டுதோறும் தண்ணீர் பற்றாக்குறை அல்லது வெள்ளப்பெருக்கு என்ற இரு மாறுபட்ட நிலையைச் சந்திக்க நேரிடுகிறது.

÷இந்த ஆண்டு ஜூன் 12-ல் மேட்டூர் அணை திறக்காததால் குறுவை சாகுபடி இல்லை. இனி வரும் சம்பா சாகுபடிக்காவது, உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என்று, டெல்டா விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள்.

÷2006-ம் ஆண்டு மேட்டூர் அணை நீர் மட்டம் 115 அடியாக இருந்தபோது, ஜூன் 12-ல் பாசனத்துக்குத் திறக்கப்பட்டது. 2007-ல் 109.8 அடி வரை உயர்ந்த பிறகு, ஜூலை 18-ல்

திறக்கப்பட்டது. 2008-ல் 103 அடியாக இருந்தபோது, ஜூன் 12-ல் பாசனத்துக்குத் திறக்கப்பட்டது. கடந்த ஆண்டு 93 அடியாக இருந்தபோது ஜூலை 28-ல் திறக்கப்பட்டது. தற்போது மேட்டூர் அணை நீர் மட்டம் 81 அடியாக உள்ளது.

÷தென்மேற்குப் பருவமழை தொடங்கி விட்டது. காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளிலும் மழை பெய்யத் தொடங்க இருக்கிறது. எனவே மேட்டூர் அணை விரைவில் நிரம்ப வாய்ப்பு இருப்பதால் பாசனத்துக்குத் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள்.

÷அணை நிரம்பவில்லை என்று கூறிக்கொண்டு, ஆகஸ்ட் வரை மேட்டூர் அணையை திறக்காமல் காத்து இருந்து, திடீரென பலத்த மழை பெய்து மேட்டூர் அணை நிரம்பி விடுவதால், அணையைத் திறக்கும் அதேநேரத்தில் வடகிழக்குப் பருவ மழையும் வந்து, டெல்டா நிலங்கள் வெள்ளக் காடாகக் காட்சி அளித்த ஆண்டுகளும் உண்டு. நீர் மேலாண்மையில் உள்ள குறைபாடுகளே பாதிப்புகளுக்குக் காரணம் என்கிறார்கள் விவசாயிகள்.

÷மேட்டூர் அணையப் பிந்தித் திறந்த ஆண்டுகளில், கடைமடைப் பகுதிகளுக்கு (கடலூர் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர்) காலம் கடந்துதான் நீர் கிடைக்கிறது.

அதே நேரத்தில், கடைமடைப் பகுதிகள் வடகிழக்கு பருவமழையில் சிக்கி பாதிப்பைச் சந்திக்க நேரிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். முன்னதாக தண்ணீர் திறக்கப்பட்டு இருந்தால் பயிர்கள் நன்கு வளர்ந்து, மழை வெள்ளத்துக்குத் தாக்கு பிடிக்கும் நிலை உருவாகி இருக்கும் என்கிறார்கள்.

÷வீராணம் ஏரி நிரம்பி இருக்கும் நிலையில், ஜூன் 20-ம் தேதி மேட்டூர் அணை திறந்தால், 15 தினங்களில் நாற்றங்கால் பணிகளைத் தொடங்கி, ஆகஸ்ட் இறுதிக்குள் சம்பா நடவை முடித்துவிட முடியும்.

÷இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் ரவீந்திரன் கூறுகையில், காலம் கடந்து தண்ணீர் திறப்பதால், வடகிழக்குப் பருவ மழை தொடங்கி, கடைமடைப் பகுதிகள் வெள்ளப் பாதிப்பைச் சந்திக்க நேரிடுகிறது. சம்பாவுக்குப் பிறகு உளுந்து சாகுபடி முற்றிலும் பாதிக்கப்படுகிறது.

÷முன்னரே சம்பா சாகுபடியைத் தொடங்கி, வடகிழக்குப் பருவமழையில் குறைவு ஏற்பட்டால்கூட கர்நாடகத்தை அணுகி, நமக்கு உரிய காவிரிநீர் பங்கைப் பெற்று, சம்பா பருவத்தை வெற்றிகரமாக முடிக்க முடியும். காலம் கடந்து நீர் திறந்தால், வெள்ளச் சேதத்தையும், பல நூறு டி.எம்.சி. நீர் வீணாய் கடலில் கலப்பதையும் தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என்றார்.

÷இதுகுறித்து வீராணம் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் இளங்கீரன் கூறுகையில், மேட்டூர் அணையில் 70 அடி நீர் இருந்தபோதுகூட, பல ஆண்டுகளில் ஜூன் மாதத்தில் அணை திறக்கப்பட்டு இருக்கிறது.

முன்னரே மேட்டூர் அணை திறப்பதால், உரிய நேரத்தில் சம்பா சாகுபடியைத் தொடங்கி முடிக்க முடியும்.

காலம் கடந்து திறப்பதால் வடகிழக்குப் பருவ மழையில் பயிர்கள் சிக்கி வெள்ளப் பாதிப்பை சந்திக்க நேரிடும். எனவே விரைவில் மேட்டூர் அணையை பாசனத்துக்குத் திறக்க வேண்டும் என்றார்.

**தண்ணீர் இன்றி 1000 ஏக்கர் நெற்பயிர் கருகும் அபாயம்**

First Published : 15 Jun 2010 11:11:38 AM IST

தூத்துக்குடி, ஜூன் 14: தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி அருகே தண்ணீர் இல்லாமல் சுமார் 1000 ஏக்கர் நெற்பயிர் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த பயிர்களைக் காப்பாற்ற உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும்; இல்லையெனில்
ரூ.1 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனத்தில் 46,117 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. இவற்றில் 40,545 ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடி உரிமை பெற்றவை. இதில், முன்கார் சாகுபடி என்பது தாமிரபரணி பாசனத்தில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டுமே உள்ள பிரத்யேக உரிமை. நடப்பு ஆண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் 16,510.86 ஏக்கர் நிலங்களுக்கு மட்டுமே முன்கார் சாகுபடி அனுமதி அளிக்கப்பட்டது.

மருதூர் மேலக்கால் மற்றும் மருதூர் கீழக்கால் பாசனப் பகுதிகளுக்கு இந்த ஆண்டு முன்கார் சாகுபடி அனுமதி அளிக்கப்படவில்லை. இருப்பினும் பொதுப்பணித் துறை அதிகாரிகளின் வாய்மொழி உறுதிமொழியின் பேரில், மருதூர் மேலக்கால் மற்றும் கீழக்கால் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்தனர்.

அந்த வகையில் மருதூர் மேலக்காலின் கடைசிக் குளமான ஆழ்வார்திருநகரி
தென்கரை பெரியகுளத்தில் சுமார் 1200 ஏக்கரில் விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்தனர். தாமிரபரணி பாசனத்தில் கடம்பா குளத்திற்கு அடுத்தபடியாக 2-வது பெரியகுளம் இந்த தென்கரை பெரியகுளம்தான். 2800 ஏக்கர் பாசன பரப்பைக் கொண்ட இந்தக் குளத்தில் தண்ணீர் கொள்ளளவு 2.5 டி.எம்.சி. ஆகும்.

கடந்த அறுவடை முடியும் காலத்தில் இந்தக் குளத்தில் முழு அளவு, அதாவது ஏறக்குறைய 2 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீர் இருந்தது. இதையடுத்து, விவசாயிகள் பொதுப்பணித் துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். அப்போது முன்கார் சாகுபடி செய்யுங்கள், கடைசி நேரத்தில் குளத்தை முழுமையாகப் பெருக்கித் தருவதற்கு தண்ணீர் திறப்பதாக அதிகாரிகள் வாய்மொழியாக உறுதிமொழி அளித்தனர்.

அதனை நம்பி இந்த குளத்தில் சுமார் 1200 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் முன்கார் சாகுபடி செய்தனர்.

ஆனால், கடந்த சில நாள்களுக்கு முன்பு குளத்தில் உள்ள தண்ணீர் முழுவதும் காலியாகிவிட்டது. பொதுப்பணித் துறை அதிகாரிகள் அளித்த உறுதிமொழிப்படி தண்ணீர் திறந்துவிடவில்லை. தற்போது பயிர்கள் கதிரும் பொதியுமாக உள்ளது. தண்ணீர் இல்லாததால் சுமார் 1000 ஏக்கரில் பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

""சுமார் 200 ஏக்கரில் மட்டும் வசதிபடைத்தவர்கள் பம்புசெட் மூலம் தண்ணீர் இறைத்து பயிரைக் காப்பாற்றி வருகின்றனர்'' என்றார், இந்தப் பகுதி விவசாயியும், பா.ம.க. மாநில கொள்கை விளக்க அணி தலைவருமான அ. வியனரசு.

தட்டவாசல், ஆதிநாதபுரம், பிளைமடையூர், செம்பூர், ஆழ்வார்திருநகரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் சுமார் 1000 ஏக்கர் நெற்பயிரைக் காப்பாற்ற இன்னும் 20 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் தேவை.

இதற்கு முன்பு 1997ஆம் ஆண்டு விவசாயிகள் மறியல் போராட்டம் செய்ததன் காரணமாக பாபநாசம் அணையில் 39 அடியே தண்ணீர் இருந்த நிலையில் இக்குளத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அதுபோல 2006ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அணையில் 42 அடியே தண்ணீர் இருந்தபோதும், தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்போது திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையில் 58 அடி தண்ணீர் உள்ளது.

விவசாயிகள் கடன் வாங்கி தான் பயிர் செய்துள்ளனர். விவசாயிகள் பயிர் செய்யாமல் இருந்திருந்தால் குளத்தில் இருந்த 2 டி.எம்.சி. தண்ணீரும் வீணாகியிருக்கும். அதிகாரிகளின் வாய்மொழி உறுதிமொழி பேரில்தான் விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். உடனடியாக தண்ணீர் திறக்காவிட்டால் பயிர்கள் அனைத்தும் கருகி விவசாயிகளுக்கு
ரூ.1 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும் என்று வியனரசு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, அணைப் பகுதியில் தற்போது மழை பெய்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்தால், தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 80.39 அடி

First Published : 15 Jun 2010 12:27:44 PM IST

தஞ்சாவூர், ஜூன் 14: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 80.39 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,996 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,047 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**செம்மை நெல் சாகுபடியால் கூடுதல் லாபம் பெறலாம்**

First Published : 15 Jun 2010 12:24:28 PM IST

திருக்காட்டுபள்ளி, ஜூன் 14: செம்மை நெல் சாகுபடி மூலம் ஏக்கருக்கு ரூ. 2,000 கூடுதல் லாபம் பெறலாம் என்றார் தஞ்சாவூர் வேளாண் அலுவலர் ஆர். முருகவேல்.

மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் செம்மை நெல் சாகுபடி குறித்த ஒருநாள் பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

பூதலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு, பூதலூர் வேளாண் உதவி இயக்குநர் கோ. ராமதாஸ் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வை. பரிமளா, வே. பழநிவேல் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சாவூர் வேளாண் அலுவலர் ஆர். முருகவேல் பேசியது:

செம்மை நெல் சாகுபடி மூலமாக சாகுபடி சாகுபடி செய்தால் செலவு குறையும். சாகுபடியில் 25 சத மகசூல் அதிகரிக்கும். குறிப்பாக, ஏக்கருக்கு விதை சேமிப்பில் ரூ. 200, நாற்றாங்கல் தாயாரிப்புச் செலவு ரூ. 250, நடவுக் கூலி ரூ. 600, களையெடுக்க ஆள் கூலி ரூ. 500, பச்சை வண்ண அட்டையால் உரச் செலவு ரூ. 200. ஆக, சுமார் ரூ. 2,000 குறைய வாய்ப்புள்ளது.

மேலும் விவசாயிகள் விதைத் தெளிப்பு, நடவு வயல் சமன், களை மிதித்தல், உரம், நீர் மேலாண்மை, பூச்சி நோய் நிர்வாக மேலாண்மை போன்றவை குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். இதுகுறித்து ஊராட்சி மன்றத் தலைவர்கள் தங்கள் ஊராட்சிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

முகாமில் உதவி வேளாண் அலுவலர் கோபிநாதன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஜூன் 18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 15 Jun 2010 11:09:48 AM IST

நாமக்கல், ஜூன் 14:நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜூன் 18-ம் தேதி நடைபெறுகிறது.

÷நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஆரியூர் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் இக் கூட்டம் நடைபெறுகிறது.

இக் கூட்டத்துடன் வேளாண் சார்ந்த பிற ஆலோசனைக் கூட்டமும் நடைபெறும்.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவோர் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

÷கூட்டம் நடைபெறும் இடத்துக்கு விவசாயிகளை அழைத்துச் செல்ல மோகனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து வாகன வசதியும் செய்து தரப்படுகிறது.

விவசாயிகள் அனைவரும் தவறாமல் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஆட்சியர் சகாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரத்த தானம்

நாமக்கல், ஜூன் 14: உலக குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு நாமக்கல் மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கம் (பிரஸ் கிளப்) சார்பில் அரசு தலைமை மருத்துவமனையில் திங்கள்கிழமை ரத்ததானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் ஆர். முருகன் தலைமை வகித்தார். செயலர் சி. சுப்ரமணியம் முன்னிலை வகித்தார்.

மருத்துவமனை உள்ளுறை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜே. மோகன், மருத்துவமனை ரத்த வங்கிப் பணியாளர்கள் ரத்ததானம் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

சங்க உறுப்பினர்கள் பலரும் ரத்ததானம் வழங்கியதுடன், சங்கத்தின் குருதிக் கொடையாளர்கள் பட்டியலை அளித்து ரத்தம் தேவைப்படும் தருணங்களில் உடன் தானம் வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

சங்க துணைத் தலைவர் ஜெயதாஸ், உறுப்பினர்கள் குருராஜன், ஜெகதீசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 80.39 அடி**

First Published : 15 Jun 2010 11:21:13 AM IST

சேலம், ஜூன் 14: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.39 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,996 கன அடி நீர் வந்துது கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,047 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அணையின் நீர் இருப்பு 42.34 டி.எம்.சி.

**கால்நடை தொற்றுநோய் விழிப்புணர்வு முகாம்**

First Published : 15 Jun 2010 01:09:08 PM IST

நெய்வேலி, ஜூன் 14: மந்தாரக்குப்பம் திருவள்ளுவர் நகரில் அஸ்காட் திட்டத்தின் கீழ் கால்நடை தொற்றுநோய் விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

மந்தாரக்குப்பம் கால்நடை உதவி மருத்துவர் வே.தனலட்சுமி தலைமையில் நடத்தப்பட்ட முகாமில் விருத்தாசலம் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் டி.லட்சுமணன் கலந்துகொண்டு, கால்நடைகளைத் தாக்கும் நோய் குறித்தும், அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து எடுத்துக்

கூறினார். முகாமில் அப்பகுதியைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் பெரும்பாலானோர் பங்கேற்றனர்.

**குமரி மாவட்டத்தில் மழை நீடிப்பு: அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

First Published : 15 Jun 2010 11:05:23 AM IST

நாகர்கோவில், ஜூன் 14:கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் திங்கள்கிழமையும் மழை நீடித்தது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக முள்ளங்கினாவிளையில் 27.2 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்திலுள்ள பிற இடங்களிலும், அணைப் பகுதிகளிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை- 11.8, பெருஞ்சாணி- 13.8, சிற்றாறு 1- 22, சிற்றாறு 2- 16, முக்கடல்- 15, சுருளோடு- 16, பூதப்பாண்டி- 7.4, கன்னிமார்- 17.2, நாகர்கோவில்- 14.2, மயிலாடி- 5.4, புத்தன்அணை- 13.8, கொட்டாரம்- 5.8, ஆரல்வாய்மொழி- 6.6, கோழிப்போர்விளை- 11, குளச்சல்- 14.2, இரணியல்- 16.6, ஆனைக்கிடங்கு- 9.2, குருந்தன்கோடு- 9.4, அடையாமடை- 10.

அணைப் பகுதிகளில் மழை நீடிப்பதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 679 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 880 கனஅடியும், சிற்றாறு 1 அணைக்கு 52 கனஅடியும், சிற்றாறு 2 அணைக்கு 75 கனஅடியும் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை 24.50 அடியாக இருந்த பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 25.20 அடியாக உயர்ந்திருந்தது. இதேபோல, பெருஞ்சாணி நீர்மட்டம் 37 அடியிலிருந்து 39.75 அடியாகவும், சிற்றாறு 1 நீர்மட்டம் 5.64 அடியிலிருந்து 5.90 அடியாகவும், சிற்றாறு 2 நீர்மட்டம் 5.75 அடியிலிருந்து 6 அடியாகவும் உயர்ந்திருந்தது.

**சிறிய வெங்காயம் விலை உயர்வு**

First Published : 16 Jun 2010 09:40:08 AM IST

பொள்ளாச்சி, ஜூன் 15: பொள்ளாச்சி மொத்த மார்க்கெட்டில் சிறிய வெங்காயம் விலை செவ்வாய்க்கிழமை கிலோ ரூ. 20 ஆக உயர்ந்துள்ளது.

÷பொள்ளாச்சிக்கு குடிமங்கலம், உடுமலை, பல்லடம், சுல்தான்பேட்டை மற்றும் செஞ்சேரிமலை பகுதிகளில் இருந்து சிறிய வெங்காயம் அதிகஅளவில் விற்பனைக்கு வருகிறது.

பொள்ளாச்சி பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் இப்போது வரத்துக் குறைந்துள்ளது.
÷கடந்த சில நாள்களாக சிறிய வெங்காயம் விலை கிலோ ரூ. 15 வீதம் மொத்த மார்க்கெட்டில் விற்பனையானது.
செவ்வாய்க்கிழமை சிறிய வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 20 ஆக உயர்ந்தது.
சில்லறை மார்க்கெட்டில் சிறிய வெங்காய விலை கிலோ ரூ. 30 வரை விற்கப்படுவதாக வெங்காய வியாபாரி வெள்ளியங்கிரி தெரிவித்தார்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2010,00:00 IST





ஏலத்தில் காப்பர் ஆக்சி குளோரைடு உடன் பூச்சிக் கொல்லி சேர்த்து தெளித்தல்: ஏல விவசாயிகள் காப்பர் ஆக்சி குளோரைடு (சி.ஓ.சி). என்னும் பூசணக்கொல்லியை தட்டை, சரங்கள், காய் மற்றும் இலை அழுகல் நோய்களைக் கட்டுப் படுத்த மழைக்காலங்களில் தெளிக்கின்றனர். பூசணக் கொல்லியுடன் பூச்சிக் கொல்லியைச் சேர்த்து தெளிக்கலாமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சியில் கிடைத்த முடிவின்படி கீழ்க்காணும் பூச்சிக் கொல்லிகளில் ஏதாவது ஒன்றை பூசணக்கொல்லியுடன் சேர்ந்து தெளிக்கலாம். இதனால் சொரி மற்றும் தண்டு துளைப்பான் ஆகியவை கட்டுப் படுத்தப்படுகின்றன. குளோர் பைரிபாஸ் 20 எப்சி 200 மில்லி 100 லிட்டர் தண்ணீர், மோனோ குரோட்டா போஸ் 36 இசி 210 மில்லி, குயினால்பாஸ் 25 இசி 200 மில்லி, புரபனோபாஸ் 50 இசி 150 மில்லி, லேம்பி சைகலோத்ரின் 5இசி 50 மில்லி. சி.ஓ.சி.யுடன் பூச்சிக்கொல்லி சேர்த்து தெளிப்பதால் இலைகளும் காய் உதிர்தல் போன்ற சேதங்களும் ஏற்படவில்லை.

**வெண்டை ஹைபிரிடு ஓஎச்-138**
சின் ஜெண்டா நிறுவனம் வழங்கும் இந்த வெண்டை ஹைபிரிடு குறுகிய கணுக்களுடன் அதிக காய்கள், கூடுதலான மகசூலாக ஏக்கருக்கு 26.2 மெட்ரிக் டன்கள். நிகரலாபம் ஏக்கருக்கு ரூ.1,73,400 என்று கூறும் அனுபவ விவசாயி சி.துரைசாமி, த/பெ.சின்னக்கவுண்டர், ஸ்கூட்டர் தோட்டம், ஏரங்காட்டூர், உத்தண்டியூர் அஞ்சல், சத்தியமங்கலம் தாலுகா-638 402. 90037 09895. மேலும் விபரங்களுக்கு என்.செல்வக்குமார், பகுதி விற்பனை மேலாளர், சின்ஜெண்டா, 94421 54737, (மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, புதுக்கோட்டை)

**இயற்கை விவசாயத்தில் சம்பங்கி சாகுபடி** செய்து அரை ஏக்கரில் ரூ.80 ஆயிரம் லாபம் பெற்றுள்ள அனுபவ விவசாயி, திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, வெங்கடாசலபுரம் கிராமத்தில் உள்ள சுந்தரராஜ் வெற்றிக்கு காரணமாக இருப்பது நெகிழ் மூடாக்கு (மல்சிங் பாலிதீன் சீட்), மக்கிய தொழு உரம், மண்புழு உரம், கடலைப் புண்ணாக்கு, வேப்பம் புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு, பஞ்சகவ்யா, அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம், சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி ஆகிய இயற்கை உரங்கள், பூச்சிகொல்லிகள் பயன்படுத்தி யுள்ளதால் என்று கூறுகிறார் விவசாயி. மேலும் விபரங்களுக்கு "சுந்தர்ராஜ், 98432 47106 **(தகவல்: பசுமை விகடன் 10.6.10 இதழ்)**
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

தினமலர்

**கார்நெல் சாகுபடிக்கு தாமிரபரணி நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2010,04:42 IST

திருநெல்வேலி: விவசாயத்திற்கு கன்னடியன் கால்வாய் அணைக்கட்டு திறக்கப்பட்டது. திருநெல் வேலி மாவட்டத்தில் பாபநாசம் அணையில் இருந்து வெளியேறும் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சிறிய அணைக்கட்டுகள் மூலம், கால்வாய்கள் வழியாக தண்ணீர் பிரித்து வழங்கப்படுகிறது. நடப்பு கார்சாகுபடிக்கு பாபநாசம் அணையை ஒட்டியுள்ள பாசன பகுதிகளுக்கு ஜூன் முதல் தேதியில் இருந்து தண்ணீர் வழங்கப்பட்டது. சேரன்மகாதேவி, கல்லிடைகுறிச்சி பகுதி நிலங்கள் பயன்பெறும் வகையில் நேற்று கன்னடியன் கால்வாய் நீர் திறந்துவிடப்பட்டது. மத்திய

இணைஅமைச்சர் நெப்போலியன், அணைக்கட்டு ஷட்டரை திறந்து வைத்தார். பாசனம் குறித்து கலெக்டர் ஜெயராமன் கூறுகையில், கன்னடியன் அணைக்கட்டில் இருந்து வினாடிக்கு 200 கனஅடிவீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன் மூலம் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஜூன் 15 முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் தொடர்ந்து வழங்கப்படும். தேவைப்பட்டால் அதிகபட்சமாக வினாடிக்கு 480 கனஅடிவீதமும் தண்ணீர் வழங்கப்படும். தாமிரபரணியில் அடுத்துள்ள கோடகன் கால்வாய் பகுதியில் 1,207 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்றார். அடுத்தக்கட்டமாக திருநெல்வேலி கால்வாய், பாளையங்கோட்டை கால்வாய்களில் தண்ணீர் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

**நிலக்கடலை ஊடுபயிராக துவரை சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அழைப்பு**
தா.பேட்டை: "தா.பேட்டை பகுதி விவசாயிகள் நிலக்கடலை பயிரிடும் போது ஊடுபயிராக துவரை பயிரிட்டு பயன்பெறலாம்' என வேளாண் உதவி இயக்குநர் சவுந்தரம் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: திருச்சி மாவட்டம் தா.பேட்டை வட்டாரத்தில் ஆனி, ஆடி மாதங்களில் நிலக்கடலை பயிர் இரண்டாயிரத்து 500 ஹெக்டர் மானாவரி பயிராக பயிரிடப்படுகிறது. நிலக்கடலை பயிர் மானாவரியில் தனிப்பயிராக பயிரிடுவதில்லை. நிலக்கடலை பயிருடன் துவரை, ஆமணக்கு, உளுந்து, பாசிபயிர், தட்டை பயிர், எள், சூரியகாந்தி, கம்பு, சோளம் ஆகியவை ஊடு பயிராகவும், கலப்பு பயிராகவும், சுற்றுப்பயிராகவும், பயிரிடும் பழக்கம் உள்ளது.

நிலக்கடலை பயிர் ஏதாவது ஒரு காரணத்தினால் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்தாலும், ஊடுபயிர் கலப்பு பயிரில் விளைச்சல் எடுத்து வருமானம் நிலை நிறுத்தப்படுகிறது. ஊடு பயிராக வேறு பயிர்கள் நிலக்கடலையில் பயிரிடும் போது சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதல் கணிசமாக குறைக்கப்படுகிறது. எனவே, நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள் ஊடுபயிராக துவரை பயிரிட வேண்டும். நிலக்கடலை பயிர் வளம் குறைந்த நீர் பிடிப்புத்திறன் இல்லாத மற்றும் மழை பெய்தவுடன் மழைநீர் நிலத்தில் இறங்கி கீழே சென்று விடும்படியான செம்மண் நிலத்தில் பயிரிட வேண்டும். நிலக்கடலை பயிர் சிம்பு வேர் கொண்ட பயிராகும். இதனால், இதன் வேர் அதிக ஆழம் செல்லாது.அரை அடி ஆழத்தில் உள்ள சத்துக்கள் எடுத்து வளரும் தன்மை கொண்டது. ஆனி, ஆடி பட்டத்தில் நிலக்கடலை பயிரிடும் பொழுது ஐந்து வரிசை நிலக்கடலைக்கு, ஒரு வரிசை துவரையினுடைய இடைவெளியில் ஊடுப்பயிராக பயிரிடலாம். துவரைப்பயிரின் வேர்கள் அரை அடிக்கு கீழே சென்று ஆழத்தில் உள்ள நீரையும், சத்துக்களையும் எடுத்து வளர்ந்து மகசூல் தரும். தற்போது பயிரின் விலை அதிகரித்துள்ளதால் ஊடுபயிராக ஏக்கருக்கு இரண்டு கிலோ முதல் நான்கு கிலோ வரை துவரை பயிரிட்டால் நில வளம் மற்றும் காலத்திற்கேற்ப 200 கிலோ முதல் 400 கிலோ துவரை மகசூல் எடுக்கலாம். 300 கிலோ மகசூல் கிடைத்தால் கூட

ஏக்கருக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, மானாவரி நிலக்கடலையும், துவரை ஊடுபயிராக பயிரிட்டு அனைத்து விவசாயிகளும் பயன்பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**துல்லிய பண்ணை திட்டத்தில் கரும்பு அதிக மகசூல் ஹெக்டேருக்கு 150 மெட்ரிக் டன் அறுவடை**

ஈரோடு: சென்னிமலை பகுதியில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் "வாட்டர் ஃபில்டர் யூனிட்' என்ற கருவியின் துணையுடன், தண்ணீர் செலவின்றி, கரும்பு விளைச்சலில் நான்கு விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, மஞ்சள், வாழை ஆகிய பயிர்களை விவசாயிகள் அதிகளவு பயிரிடுகின்றனர். கரும்புக்கு கூடுதல் விலை கிடைத்து வருவதால், ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் அதிகளவு கரும்பு பயிரிடுகின்றனர். மஞ்சள் விலை தங்கத்துக்கு நிகராக ஏறுமுகமாக இருப்பதால், மஞ்சள் சாகுபடியும் அதிகரித்துள்ளது. சென்னிமலை வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு விளைச்சலில் நான்கு விவசாயிகள் அதிக மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளனர். இதற்கு அவர்கள் கையாண்ட சொட்டு நீர்ப்பாசன முறையே காரணம். சென்னிமலை வேளாண் உதவி இயக்குனர் சின்னசாமி, வெள்ளோடு துணை வேளாண் அலுவலர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் கூறியதாவது: சென்னிமலை வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், துல்லிய பண்ணைத் திட்டம் மூலம் வெள்ளோடு, மேட்டுப்பாளையம் மற்றும் குப்பிச்சிபாளையம் கிராமங்களில் 50 ஏக்கர் பரப்பளவில் 20 விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர்.
கரும்பு பயிர்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டது.கரும்பு பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக, "வாட்டர் ஃபில்டர் யூனிட்' என்ற கருவியின் துணையுடன் கிணற்றில் இருந்து ண்ணீர் பெறப்பட்டு, அவை கரும்பு தோட்டத்துக்கு, நிலத்தின் அடியில் பதிக்கப்பட்ட குழாய் மூலம் சொட்டு, சொட்டாக சென்றடைகிறது. இதன் மூலம் தண்ணீர் செலவு மிகவும் குறைகிறது. நிலத்தின் அடியில் செல்லும் குழாய்களில் எப்போதும் தண்ணீர் இருப்பதால், மண்ணும் ஈரப்பசையுடன் காணப்படும். "வாட்டர் ஃபில்டர் யூனிட்' கருவி மூலம் தண்ணீர் பெறப்படும் போது, தண்ணீரில் உள்ள கற்கள், மண்கள் மற்றும் குப்பை ஆகியவை தனியாக பிரிந்து விடும். தண்ணீர் மட்டும் குழாய் மூலம் பயிரை சென்றடையும். இதன் மூலம், தண்ணீர் செலவு 30 சதவீதம் மிச்சமாகிறது. நீர் பாய்ச்சும் செலவும், நேரமும் மிச்சமாகிறது. களைகள் அதிகம் ஏற்படுவதில்லை. நீரில் கரையும் உரங்களையும், குழாய் மூலம் அனுப்புவதால் உரம் சேதாரம் இல்லாமல் முழுமையாக பயிருக்கு கிடைக்கிறது. ஒரே சீராக உரம் செல்வதால் அதிக மகசூல் கிடைக்கிறது. உரம் வைக்கும் ஆள் கூலி செலவும் இல்லை. விவசாயி சண்முகசுந்தரம், ஒரு ஹெக்டரில் 154 மெட்ரிக் டன் கரும்பு மகசூல் எடுத்து சாதனை செய்துள்ளார்.

சுப்பிரமணியம் 153 மெட்ரிக் டன், தசரத ராஜ்குமார் 154 மெட்ரிக் டன், பொன்னுசாமி 150 மெட்ரிக் டன் கரும்பு மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் 600 விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசன முறையில் கரும்பு சாகுபடி செய்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர். அதிக மகசூல் எடுத்த விவசாயிகள் கூறியதாவது: "வாட்டர் ஃபில்டர் யூனிட்' கருவியின் விலை 1.25 லட்சம் ரூபாய். வேளாண் துறை சார்பில் 65 சதவீதம் மானியம் கிடைத்தது. மீதமுள்ள 35 சதவீதத்தை "சக்தி சுகர்ஸ்' நிறுவனத்தினர் கடனாக கொடுத்துள்ளனர். நாங்கள் அந்நிறுவனத்துக்கு அந்த தொகையை மூன்று ஆண்டுகளில் கொடுத்து விடுவோம். நிலத்தின் அடியில் குழாய் வைத்து சொட்டு நீர்ப்பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதால், மண் இறுகுவதில்லை. வேர் வளர்ச்சி நன்றாக உள்ளது. முன்பு, சராசரியாக ஒரு ஹெக்டருக்கு 125 முதல் 130 மெட்ரிக் டன் கரும்பு மட்டுமே கிடைத்து வந்தது. துல்லிய பண்ணைத் திட்டத்தின் மூலம் 150 முதல் 155 மெட்ரிக் டன் வரை மகசூல் கிடைக்கிறது. இத்திட்டம் செயல்படுத்துவதன் மூலம் ஒரு ஹெக்டருக்கு 50 ஆயிரம் ரூபாய் நிகர லாபம் கிடைத்துள்ளது. அதுமட்டுமின்றி பைப் லைன் மூலம் நீரில் கரையும் உரங்களை பாய்ச்சுவதால் வேலை சுமை குறைந்துள்ளது. ஒவ்வொரு விவசாயிக்கும் ஓராண்டுக்கு ஒரு ஹெக்டருக்கு தேவையான 46 ஆயிரத்து 950 ரூபாய் மதிப்புள்ள உரம் வேளாண்மைத்துறை மூலம் இலவசமாக வழங்கியுள்ளனர். இப்பகுதியில் 20 விவசாயிகள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் சாகுபடி ஜோர் டி.என்.பாளையம்:**
அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில் குருவை நெல் சாகுபடி பணி மும்முரமாக நடக்கிறது. கொடிவேரி அணையில் இருந்து பிரியும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலம், டி.என்.பாளையம், கோபி வட்டாரங்களை சேர்ந்த 24 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஏப்ரல் 15ம் தேதி குருவை சாகுபடிக்காக கொடிவேரி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. டி.என்.பாளையம் வட்டாரத்தில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு நடவுப்பணி முடிவடைந்துள்ளது. இதில், 1,000 ஏக்கர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அரக்கன்கோட்டை பாசனத்தில் டி.என்.பாளையம், புளியம்பட்டி, பங்களாபுதூர், கள்ளிப்பட்டி பகுதிகளில் நாற்று நடவு முடிந்துள்ள நிலையில், பச்சைப் பசேலென தலைதூக்கி நிற்கும் நெற்பயிர்கள் கண்களுக்கு விருந்தளிக்கிறது.

**வெண்டைக்காய் சாகுபடி அதிகரிப்பு**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மூன்று மாதப்பயிரான வெண்டைக்காயை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் கத்தரி, வெண்டை, பூசணி போன்ற காய்கறிப் பயிர்களை விவசாயிகள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது

வெண்டைக்காய் சீஸனாக இருப்பதால் மாவட்டத்தின் பல இடங்களில் வெண்டைக்காய் பயிரிட்டுள்ளனர். கோபி, பவானி, மொடக்குறிச்சி, அவல்பூந்துறை, கனகபுரம், சென்னிமலை ஆகிய இடங்களில் அதிகளவு வெண்டைக்காய் பயிரிட்டுள்ளனர். வெண்டைக்காயில் நல்ல லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். வெள்ளோடு அருகே கனகபுரம் விவசாயிகள் கூறியதாவது: சென்றாண்டு வெண்டைக்காய்க்கு அதிக விலை கிடைக்கவில்லை. இந்தாண்டு துவக்கத்தில் இருந்தே வெண்டைக்காய்க்கு அதிக விலை கிடைத்து வருகிறது. முகூர்த்த நேரங்களில் அதிகளவு வெண்டைக்காய் விற்பனையாகிறது. மூன்று மாதப் பயிராக இருப்பதால், உடனுக்குடன் பலனும் கிடைக்கிறது. அதிகளவு தண்ணீர் தேவையில்லை. கூலியாட்கள் தேவையும் குறைவு போன்ற காரணங்களால் மொடக்குறிச்சி, வெள்ளோடு, கனகபுரம் பகுதியில் விவசாயிகள் வெண்டைக்காய் அதிகம் பயிரிட்டுள்ளனர். நிலத்தை உழுது சரியான முறையில் உரம் வைத்தால் போதும், வெண்டையின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் கால் ஏக்கரில் 50 கிலோ வெண்டைக்காய் கிடைக்கிறது. அதை நாங்கள் வேன் மூலம் ஈரோடு பெரிய மார்க்கெட், சின்ன மார்க்கெட் வியாபாரிகளுக்கு கொடுத்து விடுகிறோம். ஒரு கிலோ 15 ரூபாய்க்கு நாங்கள் வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறோம். தொடர்ந்து லாபம் கிடைத்து வருவதால், வெண்டை பயிரிடுவது மேலும் அதிகரித்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### ரூ.5.84 லட்சத்துக்கு கருப்பட்டி விற்பனை

கோபிசெட்டிபாளையம்: குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்தில் பனை மற்றும் தென்னை கருப்பட்டி ஐந்து லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விற்றது. கோபி, சிறுவலூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் பனை மற்றும் தென்னை கருப்பட்டிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை கோபி அருகே குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் திங்கள் கிழமை நடக்கும் ஏலத்தில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கோவை, திருப்பூர், பெருந்துறை, தாராபுரம் மற்றும் கேரளாவில் இருந்து ஏராளமான வியாபாரிகள், கருப்பட்டியை ஏலத்தில் எடுத்து செல்கின்றனர். சென்றாண்டு பருவ மழை ஏமாற்றம் காரணமாக பதநீர் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளதால், பனை கருப்பட்டி உற்பத்தி குறைந்தது. குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்துக்கு நடப்பு வாரம் 10 ஆயிரம் கிலோ தென்னை கருப்பட்டி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதிகபட்சமாக ஒரு கிலோ 47.90 ரூபாய் விற்றது. நான்கு லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விற்பனை நடந்தது. பனை கருப்பட்டி 2,000 கிலோ விற்பனைக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 56.90 ரூபாய்க்கு விற்றது. ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பில் பனை கருப்பட்டி வர்த்தகம் நடந்தது. பதநீர் உற்பத்தி குறைவால் கடந்த வாரத்தை விட நடப்பு வாரம் பனை கருப்பட்டி வரத்து 4,000

கிலோவில் இருந்து, 2,000 கிலோவாக குறைந்து விட்டது. ஆனால், தென்னை கருப்பட்டி கடந்த வாரத்தை விட 2,000 கிலோ அதிகமாக 10 ஆயிரம் கிலோ ஏலத்துக்கு வந்தது.

**தடப்பள்ளி பாசனப்பகுதியில் செம்மை நெல் சாகுபடி அதிகரிப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி தடப்பள்ளி பாசன பகுதிகளில் செம்மை நெல் நாற்று முறையில் நடவு செய்யப்பட்டுள்ள வயல்களில் "கோனா வீடர்' கருவி மூலம் களை எடுக்கும் பணி விறுவிறுப்பாக நடக்கிறது. பவானிசாகர் அணை மற்றும் கொடிவேரி அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் முதல்போக சாகுபடிக்காக கடந்த ஏப்ரல் மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. நடப்பாண்டு முதல்போக சாகுபடியில் நெல் மற்றும் மஞ்சள் ஆகியவை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் செம்மை நெல் சாகுபடி முறையில் 3.750 ஏக்கரில் நெல் பயிரிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1,700 ஏக்கரில் செம்மை நெல் நாற்று முறையில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தடப்பள்ளி பாசன பகுதிகளான செங்கலக்கரை, தொட்டிபாளையம், சோழமாதேவிக்கரை பகுதியில், "கோனா வீடர்' கருவி மூலம் களை எடுக்கும் பணி நடந்து வருகிறது. ""செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றினால், குறைந்த விதை நெல் மற்றும் விவசாயக் கூலி தொழிலாளர்களே போதும். அதிக மகசூலும் கிடைக்கிறது. விவசாய கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ள கோபி வட்டாரத்தில், விவசாயிகள் அதிகளவில் செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிட்டுள்ளனர்,'' என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**செம்மை நெல் சாகுபடி:பஞ்., தலைவருக்கு பயிற்சி**

கும்பகோணம்: திருப்பனந்தாளில் செம்மை நெல் சாகுபடியில் குறைந்த செலவில் இரட்டிப்பு வருமானம் பெற செம்மைநெல் சாகுபடி குறித்து பஞ்சாயத்து தலைவருக்கான புத்தூட்ட பயிற்சி நடந்தது. கும்பகோணம் அருகே திருப்பனந்தாள் வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடியில் குறைந்த செலவில் இரட்டிப்பு வருமானம் பெற முதல்வரின் திட்டமான செம்மைநெல் சாகுபடி குறித்து பஞ்சாயத்து தலைவருக்கான பயிற்சி வேளாண் துறையினரால் பஞ்சாயத்து தலைமைகூட்ட மன்றத்தில் நடந்தது.யூனியன் தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.

ஒவ்வொரு பஞ்சாயத்து தலைவர்களும் 100 சதவீதம் செம்மை நெல் சாகுபடி வெற்றியடைய வேண்டுமென வலியுறுத்தி ரவிச்சந்திரன் பேசினார்.துணை வேளாண் அலுவலர் அலாவுதீன் வரவேற்று, செம்மை நெல் சாகுபடி பயிர் செய்தால் இரு மடங்கு லாபம் என்றார். வேளாண் உதவி இயக்குனர் முத்துகூரி செம்மை நெல் சாகுபடி பற்றிய தொழில் நுட்பங்கள் பற்றி

பேசினார்.திருப்பனந்தாள் யூனியனில் செம்மை நெல் சாகுபடி செய்து பத்து டன் மகசூல் செய்த விவசாயிகளை பாராட்டி பொன்னாடை போர்த்தி கவுரவப்படுத்தினர். உதவி வேளாண் அலுவலர் பன்னீர் செல்வம் நன்றி கூறினார்.

**ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவு**

நாமக்கல்: "ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் இம்மாதம் 30ம் தேதிவரை உறுப்பினர் பதிவு செய்யப்படுகின்றனர்' என, மாவட்ட கலெக்டர் சகாயம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழக கிராமங்களில் ஆடுவளர்க்கும் தொழிலை பெரும்பாலானோர் மேற்கொண்டு வருகின்றனர். ஆடு வளர்ப்போர் நலனுக்காக,ஊரக தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் தலைமையில் ஆடு வளர்ப்போர் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. ஆடு வளர்ப்போர் அருகில் உள்ள அந்தந்த கால்நடை மருந்தகங்களில் இம்மாதம் 30ம் தேதிக்குள் பெயர்களை பதிவு செய்து உறப்பினராகலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டி.ஏ.பி., கரைசல் தெளிக்க யோசனை**

ராசிபுரம்: "இறவை பாசி பயறுக்கு டி.ஏ.பி., கரைசல் தெளித்து விவசாயிகள் பயன்பெறலாம்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ராசிபுரம் வட்டார விவசாயிகள் மானாவாரியில் இறவை பாசி பயிறு விதைத்துள்ளனர். தற்போது, செடிகள் பூக்கும் பருவத்தில் இருப்பதால், இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை பூக்கத்துவங்கியவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

அதனால், பூக்கள் உதிர்வது குறைவதோடு திரட்சியான மணிகள் மற்றும் அதிக மகசூல் கிடைக்கும். இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசல் தயாரிக்க முதல் நாள் இரவே ஐந்து கிலோ டி.ஏ.பி.,யை 10 லிட்டர் நீரில் ஊர வைத்து, மறுநாள் தெளிந்த நீரை வடிகட்டி அதனுடன் 240 லிட்டர் நீர் கலந்து மண்ணில் ஈரம் இருக்கும் போது, காலை அல்லது மாலை வேளையில் தெளித்து விவசாயிகள் பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கோழி வளர்ப்புக்கு 18ல் பயிற்சி முகாம்**

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 18ம் தேதி மாற்று கோழியினங்கள் வளர்ப்பு பற்றி ஒரு நாள் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில், , நாட்டுக்கோழி, வான்கோழி, கின்னிக் கோழி, வாத்து, காடை மற்றும் ஈ.மு.கோழிகள் வளர்ப்பு குறித்து விரிவான

விளக்கம் அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கோழியினங்களை மாற்று வாழ்வாதாரமாக கொண்டு செல்லும் வழிமுறை, சந்தைப்படுத்துதல் குறித்தும் விளக்கமளிக்கப்படுகிறது. மேலும், கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை டாக்டர்கள், கிராம வளர்ச்சித்திட்ட களப்பணியாளர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சுயஉதவி குழு ஒருங்கிணைப்பாளர்கள், நுண்நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கலாம். இதில் பங்கேற்க விருப்பம் உள்ளோர் மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு 17ம் தேதிக்குள் நேரில் வந்தோ அல்லது ஃபோன் மூலமாக பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும். 04286-266345, 266244 ஆகிய ஃபோன் எண்களில் பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.

**தக்காளி விலை வீழ்ச்சி**

தேவாரம்: ஆந்திராவிலிருந்து தக்காளி வரத்து துவங்கியுள்ளதால் தேவாரம் மார்க் கெட்டில் விலை கிலோவிற்கு 20 ரூபாய் குறைந் துள்ளது. தேவாரம், டி.மீனாட்சிபுரம், கோம்பை, மேலசிந்தலைச்சேரி, ராயப்பன் பட்டி, என்.டி.பட்டி, கூடலூர் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் தக்காளி பயிரிடப் பட்டுள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ தக்காளி 30 ரூபாய்க்கு மேல் விற்பனையானது. தற்போது ஆந்திரா தக்காளி வரத்து துவங்கி விட்டது. திருச்சி, சென்னை, மதுரை போன்ற பெரிய மார்க்கெட்டுகளுக்க ஆந்திரா தக்காளி வருவதால் விலை படிப்படியாக குறைந்தது. நடப்பு வாரத்தில் விலை சரிந்து கிலோ 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

**களை கட்டும் மாம்பழ விற்பனை**

மதுரை:மதுரையில் மாம்பழங்கள் வரத்து அதிகரிப்பால், விலை சீராக உள்ளது. மழை சீசன் ஆரம்பித்த போதிலும் பழ விற்பனை களை கட்டுகிறது.பழங்கள் விலை குறித்து, யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : மாம்பழ வகைகளில் இமாம்பசந்த் 80 ரூபாய், சப்பட்டை 60, பாலாமணி 50, காசாலட்டு 50, மல்கோவா 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆப்பிள் 130-110 ரூபாய், காபூல் மாதுளை 110, சீட்லெஸ் 80, பன்னீர் திராட்சை 40, தில்குஷ் 70, ஆஸி., ஆரஞ்சு 120, துரியன் 350, அன்னாசி 25, பப்பாளி 15, சப்போட்டா 20, கிர்னி 30, கொடை ஆரஞ்சு 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**கார்நெல் சாகுபடிக்கு தாமிரபரணி நீர் : நெப்போலியன் திறந்து வைத்தார்**

திருநெல்வேலி: விவசாயத்திற்கு கன்னடியன் கால்வாய் அணைக்கட்டை அமைச்சர் நெப்போலியன் திறந்துவைத்தார்.
திருநெல் வேலி மாவட்டத்தில் பாபநாசம் அணையில் இருந்து வெளியேறும் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சிறிய அணைக்கட்டுகள் மூலம் கால்வாய்கள் வழியாக தண்ணீர் பிரித்து வழங்கப்படுகிறது. நடப்பு கார்சாகுபடிக்கு பாபநாசம் அணையை ஒட்டியுள்ள பாசன பகுதிகளுக்கு ஜூன் முதல் தேதியில் இருந்து தண்ணீர் வழங்கப்பட்டது. சேரன்மகாதேவி, கல்லிடைகுறிச்சி பகுதி நிலங்கள் பயன்பெறும் வகையில் நேற்று கன்னடியன் கால்வாய் நீர் திறந்துவிடப்பட்டது. தமது மகன் சிகிச்சைக்காக நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் தங்கியிருக்கும் மத்திய இணைஅமைச்சர் நெப்போலியன், அணைக்கட்டு ஷட்டரை திறந்து வைத்தார். பாசனம் குறித்து கலெக்டர் ஜெயராமன் கூறுகையில், கன்னடியன் அணைக்கட்டில் இருந்து வினாடிக்கு 200 கனஅடிவீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன் மூலம் 12 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறுகிறது. ஜூன் 15 முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் தொடர்ந்து வழங்கப்படும். தேவைப்பட்டால் அதிகபட்சமாக வினாடிக்கு 480 கனஅடிவீதமும் தண்ணீர் வழங்கப்படும். தாமிரபரணியில் அடுத்துள்ள கோடகன்கால்வாய் பகுதியில் ஆயிரத்து 207 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்றார். அடுத்தக்கட்டமாக திருநெல்வேலி கால்வாய், பாளையங்கோட்டை கால்வாய்களில் தண்ணீர் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி காங்.,எம்.எல்.ஏ.,வேல்துரை, பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.படவிளக்கம்நெல்லை மாவட்டத்தில் நெல்பயிர் கார்சாகுபடிக்காக கன்னடியன் கால்வாயை மத்திய அமைச்சர் நெப்போலியன் திறந்துவைத்தார். கார் நெல்சாகுபடிக்காக திறந்துவிடப்பட்ட கன்னடியன் கால்வாய் தண்ணீர் அணைக்கட்டிருந்து வெளியேறுகிறது.

**காய்கறி மார்க்கெட்டில் கூடுதல் சுங்கக் கட்டணம் வசூல்: விவசாயிகள் திடீர் சாலை மறியல்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி சந்தைபேட்டை காய்கறி மார்க்கெட்டில் கூடுதல் சுங்க கட்டணம் வசூலிப்பதை கண்டித்து விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி பழைய தபால் நிலையம் சந்தைபேட்டையில் காய்கறி சந்தை செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 2,000 விவசாயிகள் தினம் தங்கள் விளை நிலங்களில் விளையும் காய்கறிகளை தினம் சந்தை பேட்டை காய்கறி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். நகராட்சி மூலம் காய்கறி மார்க்கெட்டை குத்தகை எடுத்தவர்கள், விவசாயிகளிடம் சந்தையில் காய்கறிகளை

விற்பனை செய்ய சுங்க கட்டணமாக ஒரு கூடைக்கு ஐந்து ரூபாயும், ஒரு மூட்டைக்கு பத்து ரூபாயும் என வசூல் செய்கின்றனர்.

காய்கறிகள் விலை அதிகமாக இருக்கும் பட்சத்தில், குறிப்பிட்ட தொகையை விட அதிக கட்டணம் வசூலிப்பதாக விவசாயிகள் அடிக்கடி புகார் தெரிவித்து வந்தனர். ராயக்கோட்டை அடுத்த காலன்கொட்டாய் கிராமத்தை சேர்ந்த விவசாயி மல்லன் (80) கடந்த 13ம் தேதி சந்தைக்கு கூடையில் காய்கறிகள் கொண்டு வந்தார். அப்போது, அவரிடம் கட்டணம் வசூலித்தவர்கள் கூடுதல் கட்டணம் கேட்டுள்ளனர். அதற்கு அவர் காய்கறிகளை விற்பனை செய்து வந்து தருவதாக கூறியுள்ளார். இதனால், அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த கட்டணம் வசூலித்தவர்கள், முதியவர் மல்லனை சரமாரியாக தாக்கினர்.

அங்கு நின்ற விவசாயிகள் முதியவரை அவர்களிடம் இருந்து காப்பாற்றி வீட்டுக்கு அனுப்பினர். காயமடைந்த முதியவர் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். முதியவரை கட்டணம் வசூலிப்பவர்கள் தாக்கிய சம்பவம் விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.நேற்று அதிகாலை கட்டணம் வசூலிப்பர்கள், விவசாயிகளிடம் கூடுதல் கட்டணம் கேட்டனர். இதனால், விவசாயிகளுக்கும், அவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. தமிழக விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த லோகஅபிராம் தலைமையில் விவசாயிகள் ஒன்று திரண்டு சந்தை அருகே அதி காலை ஐந்து மணி முதல் சாலைமறியலில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்த தாசில்தார் ராஜகோபால், நகராட்சி கமிஷனர் பவுலோஸ் மற்றும் டவுன் இன்ஸ்பெக்டர் கண்ணப்பன் ஆகியோர் மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது விவசாயிகள், "விவசாயிகளை தாக்கிய நுழைவு கட்டணம் வசூலிப்போர்களை கைது செய்ய வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலிக்காமல் நியாயமான முறையில் நுழைவு கட்டணம் வசூலிக்க வேண்டும்' என வலியுறுத்தினர். அதிகாரிகள் இரு கோரிக்கையையும் நிறைவேற்றுவதாக உறுதியளித்தனர். விவசாயிகள் இரண்டு மணி நேரத்துக்கு பின் மறியலை கைவிட்டனர். விவசாயிகள் தரப்பினரையும், குத்தகைதாரர் தரப்பினரையும் அழைத்து ஆர்.டி.ஓ., அன்பரசு முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில், விவசாயிகளை தாக்கிய நபர்களை கைது செய்யவும், நுழைவு கட்டணம் நகராட்சி நிர்வாகம் நிர்ணயித்த முறைப்படி வசூலிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

**தென்னையில் வேகமாக பரவும் மர்ம நோய் தாக்குதல்: மரங்களை இழக்கும் விவசாயிகள் வேதனை**

உடுமலை : தென்னை மரங்களில் வேகமாக பரவி, மரங்களை அழித்து வரும் மர்ம நோயால், உடுமலை சிக்கனூத்து பகுதி விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
உடுமலை அருகே உள்ள சிக்கனூத்து மற்றும் சுற்றுப்பகுதிகளில் தென்னை சாகுபடி பிரதானமாக உள்ளது. கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் தென்னை மரங்களை பல்வேறு நோய்கள் தாக்கி வருகின்றன. கடந்த மாதம், இப்பகுதியைச் சேர்ந்த கனகராஜ் என்பவரது தோட்டத்தில் 15 ஆண்டுகளான தென்னை மரங்களில் ஒருவித மர்மநோய் ஏற்பட்டது. தென்னை மட்டைகளில் பச்சையம் குறைந்து, செம்பழுப்பு நிறமாக மாறியது. தொடர்ந்து மட்டைகள் சத்து பற்றாக்குறையால் கீழே விழத்துவங்கின. நோய் குறித்த விழிப்புணர்வு, விவசாயிகளிடம் இல்லாத நிலையில் அருகிலுள்ள கார்த்திகேயன், சக்திவேல், சுப்ரமணி, நடராஜன் உட்பட பல விவசாயிகளின் தோட்டத்தில் மர்மநோய் தாக்குதல் பரவியது. மட்டைகள் தொடர்ந்து விழுந்ததால், தேங்காய் குலைகள் மரத்தில் இருந்து தனிச்சையாக கீழே விழுந்தன. தொடர்ந்து மரத்தின் மேற்பகுதியில் இருந்த குருத்து அடியோடு சாய்ந்தது. இதனால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.கீழே விழுந்த மட்டைகளில் உள்ள ஓலைகளை விவசாயிகள் எடுத்து பார்த்ததில் பல்வேறு வகையான புழுக்கள் காணப்பட்டன. இப்புழுக்கள் குறுகிய நாட்களில் ஓலையின் பச்சையம் முழுவதையும் சுரண்டியுள்ளது. மரத்தின் இயல்பான நடவடிக்கைகள் பச்சையம் இல்லாமல் பாதிக்கப்பட்டதால் காய்ப்புத்திறன் அடியோடு குறைந்து, குருத்துகள் சத்து இல்லாமல் ஒடிந்து விழுந்துள்ளன.நோய் தாக்கிய மரங்கள் மட்டைகள் இல்லாமல் மொட்டையாக காட்சியளிக்கின்றன.

இதுகுறித்து பெதப்பம்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தும், அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறுகிய காலத்தில் 200 ஏக்கர் பரப்பளவிற்கு மர்மநோய் பரவியுள்ளது. 15 முதல் 20 வயதுடைய ஆண்டுக்கு 160 காய்கள் வரை, விளைச்சல் அளித்து வந்த மரங்கள் காய்வதால், விவசாயிகளுக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து பரவி வரும் மர்மநோயை கட்டுப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகள் கூறியதாவது:** மர்ம நோய் தாக்குதல் 20 ஆண்டுகளாக பராமரித்த மரங்களை இழந்து வருகிறோம். புதிதாக கன்று நட்டு பராமரித்தாலும், அவை காய்ப்புக்கு வர பல ஆண்டுகள் பிடிக்கும். மர்மநோயை கட்டுப்படுத்த வேளாண் துறை அதிகாரிகள் கண்டுகொள்ளாத நிலையில், விவசாயியே ஒருங்கிணைந்து நோய் தடுப்பு பணிகளில் ஈடுபட்டோம். ஆனால், எந்த பலனும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன், இப்பகுதியில் ஏற்பட்ட நோய் தாக்குதலால்

நூற்றுக்கணக்கான மரங்கள் காய்ந்தன. தற்போது பரவி வரும் மர்ம நோயும் சிக்கனூத்து பகுதியில் கடும் சேதம் ஏற்படுத்தி வருகிறது. வேளாண் துறை அதிகாரிகள் தொடர்ந்து மெத்தனப்போக்கை கடைபிடித்தால் இப்பகுதி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட முடிவெடுத்துள்ளோம், என்றனர்.

### 149 விவசாயிகளுக்கு ரூ.11.26 லட்சம் நிவாரணம்: விடுபட்டவர்களுக்கு மீண்டும் அழைப்பு

திருப்பூர் : சாயக்கழிவு நீரால் பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளுக்கு, 11.26 லட்சம் ரூபாய் நிவாரண தொகை, திருப்பூர் மற்றும் சுற்றுப்பகுதியில் நடந்த முகாம்களில் வழங்கப் பட்டுள்ளது. திருப்பூர் சாய ஆலைகளில் இருந்து வெளியேறிய சாயக்கழிவு நீரால், சுற்றுப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கில், பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு, 36.40 கோடி ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என, சாய ஆலை உரிமையாளர் களுக்கு ஐகோர்ட் உத்தரவிட்டது. சாய ஆலை உரிமையாளர்கள் சங்கம் சார்பில், முதல்கட்டமாக ரூ.14.62 கோடி செலுத்தப்பட்டது. அதில், 4.50 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மீதியுள்ள 10 கோடிக்கும் அதிகமான தொகை வழங்க வேண்டியிருந்தது. இரண்டு கட்டமாக நடந்த அம் முகாம்களில், தேவையான ஆவணங் களை முறையாக சமர்ப்பித்த விவசாயிகளுக்கு, நிவாரண தொகை வழங்கப்பட்டது. ஊத்துக்குளி, சென்னிமலை, திருப்பூர் உள்ளிட்ட ஒன்றிய பகுதிகளில் உள்ள விவசாயி கள் நிவாரண தொகை பெற்றுள்ளனர்.

விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கும் முகாம் மீண்டும் நடந்தது. மங்கலத்தில் 14 விவசாயிகளுக்கு 26 ஆயிரத்து 636 ரூபாய் ஆண்டிபாளையத்தில் இருவருக்கு 19 ஆயிரத்து 320 ரூபாய்; வீரபாண்டியில், 33 பேருக்கு ஏழு லட்சத்து 33 ஆயிரத்து 620 ரூபாய். நல்லூரில் மூன்று பேருக்கு 3,360 ரூபாய்; முதலிபாளையத்தில் 10 பேருக்கு 45 ஆயிரத்து 268 ரூபாய்; மண்ணரையில், 13 பேருக்கு 84 ஆயிரம் ரூபாய்; செட்டிபாளையத்தில், 23 பேருக்கு ஒரு லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்; தொட்டிபாளையத்தில் ஒருவருக்கு 905 ரூபாய்; நெருப் பெரிச்சல் ஊராட்சியில், 22 விவசாயி களுக்கு 45 ஆயிரத்து 393 ரூபாய் வழங்கப்பட்டது.

திருப்பூர் தாலுகாவில், ஒன்பது வருவாய் கிராமங்களில் நடந்த சிறப்பு முகாம்களில், 108 விவசாயிகளுக்கு 10 ட்சத்து 80 ஆயிரத்து 502 ரூபாய் வழங்கப்பட்டது. மங்கலத்தில் நடந்த மனுநீதிநாள் முகாமில் மூன்று பேருக்கு 2,471 ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன. மேலும், தாலுகா அலுவலகத்திற்கு வந்து விண்ணப்பித்த விவசாயி களுக்கும் நிவாரண தொகை வழங்கப் பட்டுள்ளது. இதுவரை 149 விவசாயி களுக்கு, 11 லட்சத்து 26 ஆயிரத்து 954 ரூபாய் நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது.

தாசில்தார் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""திருப்பூர் தாலுகாவில், இதுவரை மூன்று கட்டமாக நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களில் உள்ள குறைபாடு களால், பலருக்கு இன்னும் வழங்கப் படவில்லை. தேவையான ஆவணங் களுடன், அந்தந்த கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்து, நிவாரண தொகைக்கான காசோøகொள்ளலாம்," என்றார்.

**மா மகசூலினை கடுமையாக பாதித்த காலநிலை மாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2010,00:00 IST



பெங்களூருவுக்கு அருகில் அசர்கட்டாவில் உள்ள மத்திய அரசு இயக்கி வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் மா விவசாயி விஞ்ஞானி டாக்டர் எம்.எட்வர்ட் ராஜா மா மகசூல் பாதிப்பிற்கான காரணங்களை விளக்கியுள்ளார்.

மாந்தோட்டங்களில் இரவு வெப்பநிலை அதிகரித்துள்ளது. வழக்கமாக டிசம்பர் -ஜனவரியில் இரவு வெப்பநிலை 20-23 டிகிரி செல்சியசாக இருக்கும். வெப்பநிலை தற்போது 3 டிகிரி அதிகரித்து 25-30 டிகிரி செல்சியசாக உள்ளது. வெப்ப நிலை அதிகரிப்பால் பூக்கள் வளர்ச்சி தடைபட்டு தண்டு இலைகள் வளர்ச்சி அதிகரித்து விட்டது. ஒளிச் சேர்க்கையின் காரணத்தினால் உண்டாக்கப் பட்ட ஊட்டச்சத்துக்களை இலைகள் வளர்ச்சி, உட்கொண்டு விட்டது.

* ஒளிச்சேர்க்கையை ஊக்குவிக்கும் மாமரங்களுக்காக பிரத்யேகமாக தயாரித்த நுண்ணூட்டச் சத்துக்களை விவசாயிகள் உபயோகிக்காமல் இருக்கின்றனர்.

* தர்மபுரி மாவட்டம் மொரப்பூருக்கு அருகிலுள்ள மிகப்பெரிய ஆல்போன்சா மாம்பழ தோட்டத்தில் பூக்களே பிடிக்காமல் இலை வளர்ச்சி அதிகமாக உள்ளது. இத்தோட்டத்தில் மரங்களுக்கு அதிக அளவு இயற்கை உரங்களே அளிக்கப்படுகின்றன. உரங்களில் உள்ள அதிக அளவு தழை, மணி,

சாம்பல் சத்துக்கள் குறிப்பாக தழைச்சத்து தோட்டத்தில் அதிக அளவு இலைகள் வளர்ச்சியை ஊக்குவித்துவிட்டது. தோப்பில் சரியாக காய்கள் பிடிக்கவில்லை.

* மா சாகுபடியிலுள்ள மிக முக்கியமான பணி ஆண்டுதோறும் மாமரங்களில் காற்று, சூரிய ஒளி இவைகள் உள் தண்டுகள் மேலும் படும்படியாகவும் சீராக கவாத்து செய்வதாகும். ஆனால் விவசாயிகள் கவாத்து பணியை செய்வதே இல்லை. கவாத்து செய்யாதபோது ஒளிச்சேர்க்கை ஏற்படுவதில்லை. இதனால் பூக்கள் சரியாக பிடிப்பதில்லை.

* அதிக அளவு தழை, தண்டுகள் வளர்ச்சி ஏற்படும்போது தத்துப்பூச்சி பாதிப்பு ஏற்படும். இதனால் பூக்கள் பிடிப்பு, பிஞ்சுகள் நிற்பது பாதிக்கப்படுகின்றன.

சாதனை விவசாயி: பால்காரன் கொட்டாய்கிராமம், கோவிந்தபுரம் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம்-635 307, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த முற்போக்கு விவசாயி என்.தண்டபாணி என்பவர் ஆல்போன்சா மா மரங்களை சிறப்பாக சாகுபடி செய்து வருகிறார். இவரது தோட்டத்தில் 13 வயதுள்ள 350 ஆல்போன்சா மரங்கள் உள்ளன. இத்தோட்டத்தில் விவசாயி ஒவ்வொரு ஆண்டும் மாங்காய் அறுவடை முடிந்ததும் ஜூலை மாதத்தில் மரங்களின் முழு பகுதியிலும் சூரிய ஒளி படும்படியாக நேர்த்தியான முறையில் கவாத்து செய்கிறார். ஆகஸ்ட் முதல் வாரத்தில் மரத்தின் அடிப்பாகத்திலிருந்து நான்கு அடி தள்ளி மரத்தைச் சுற்றி வட்ட வடிவில் பாத்தி கட்டி அதன் ஓரத்தில் உட்பகுதியில் ஒரு அடி அகலம், ஒரு அடி ஆழம் அளவிற்கு குழியெடுத்து அதில் ஊட்டம் ஏற்றிய தொழு உரம் 50 கிலோ மற்றும் யூரியா, பொட்டாஷ், சூப்பர் ஆகியவைகளை தலா 2 கிலோவும், வேப்பம் பிண்ணாக்கு 2 கிலோவும் கலந்து குழியில் போட்டு மண் மூடி 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுகிறார். அடுத்து விஞ்ஞானி எட்வர்ட் ராஜா சிபாரிசு பேரில் ""மேங்கோ ஸ்பெஷல்"' என்ற நுண்ணூட்டச் சத்து, ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் வீதம் கலந்து ஜூலை மாதம் முதல் பூ பிடிக்கும் வரை மாதம் ஒரு முறை மரத்திற்கு தெளித்துவந்தார். இது சமயம் பூச்சி மருந்துகளுடன் இதனை கலந்து தெளித்தார். (பாதிப்பு ஏதும் ஏற்படுவதில்லை) செப்டம்பர் மாதத்தில் நிலத்தில் நல்ல ஈரம் இருக்கும்போது ஏற்கனவே போட்ட வட்ட வடிவ பாத்தியில் 2 அடி இடைவெளியில் ஒரு அடி ஆழம் கடப்பாரையில் துளை போட்டு ஒரு லிட்டர் தண்ணீரில் 7 மி.லி. கல்டார் (பயிர் ஊக்கி) கலந்து குழியில் ஊற்றி மண்ணால் மூடினார்.

மாமரங்களுக்கு பூக்கள் பூப்பதற்கு ஒரு மாதம் முன்பிருந்து பாசனத்தை விவசாயி நிறுத்துகிறார். பூ முழுமையாக பிடித்து மிளகு அளவு பிஞ்சு உருவானதும் பாசனத்தை விவசாயி துவக்குகிறார். அந்த சமயம் பார்த்து மண்புழு உரம் ஒரு மரத்திற்கு 15 கிலோ விவசாயி வைக்கிறார். பாசனம் செய்யும் சமயங்களில் பொட்டாஷ் 200 கிலோ, யூரியா 100 கிலோ இடுகிறார். நோய் தடுப்பு முறைகளை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தோட்டக்கலை துறை பேராசிரியர் பாலமோகன் சிபாரிசுபடி விவசாயி செய்தார். தற்போது இவரது மரங்களில் காய்பிடிப்பு வெகு சீராக உள்ளது.

பழங்கள் நல்ல தரமாக உள்ளன. இவர் ஒவ்வொரு வருடமும் ஏக்கரில் 3 டன் மகசூலினை ஒரே சீராக எடுத்து வருகிறார். இந்த வருடம் ஏக்கரில 4 டன் மகசூல் கிடைக்கும் அளவிற்கு மகசூல் உள்ளது. இந்தவருடம் ஏக்கர் சாகுபடி செலவு ரூ.20,000 செய்துள்ளார். வியாபாரிகள் டன் ஆல்போன்சா பழங்களுக்கு ரூ.30,000 வரை விலைகொடுக்க விழைகின்றனர். விவசாயிக்கு ஒரு ஏக்கரில் ஒரு லட்சம் வரை லாபம் வரும் வாய்ப்பு உள்ளது. தொடர்ந்து சீரான விவசாயம் செய்துவரும் விவசாயி, என் தோட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் நல்ல விளைச்சலே கிடைத்து வருகிறது. தட்பவெப்பநிலை ஓரளவு மாறுபட்டாலும் விளைச்சலின் விகிதாசாரம் ஓரளவு குறையுமே தவிர முழுமையாக மரங்கள் காய்க்காமல் போக வாய்ப்பில்லை என்பதே என் அனுபவம் என்றார்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2010,00:00 IST



---

**வெங்காயவிளைச்சலை குறைக்கும் பூச்சி, நோய் மேலாண்மை**

வெங்காய இலைப்பேன்:உழவர்களால் சாம்பல்பூச்சி என்று அழைக்கப்படும் இலைப்பேன்கள் வெங்காய இலைகளின் சாற்றை உறிஞ்சி சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் இலைகள் வெளுத்துக் காணப்படும். ஒளிச்சேர்க்கை குறைவதால் பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். தீவிரமாகத் தாக்கப்பட்ட பயிர் காய்ந்து, கருகியதுபோல காணப்படும். இதன் தாக்குதல் பொதுவாக குளிர்காலப்பயிரில் அதிக அளவில் காணப்பட்டாலும் தொடர்ந்து வெங்காயம் பயிரிடப்படும் இடங்களில் இதன் தாக்குதல் வருடம் முழுவதும் காணப்படும். பூசண, நச்சுயிர்

நோய்களின் தாக்குதலை அதிகப்படுத்தும்.

**இதனைக்கட்டுப்படுத்த:** தொடர்ந்து வெங்காய சாகுபடியினை தவிர்த்து, முறையான பயிர் சுழற்சி செய்ய வேண்டும். நீர் நிர்வாகம், உர நிர்வாகம் சரியாகக் கடைபிடிக்க வேண்டும். வேம்புசார் பூச்சிக்கொல்லி (அசடிராக்டின்) ஒரு சதம் ஏக்கருக்கு 400 மில்லி தெளித்து பேன்களைக் கட்டுப்படுத்தலாம். பூச்சிக்கொல்லிகளை புரபனபாஸ் (2 மில்லி/லிட்டர்) அல்லது எண்டோசல்பான் (2மில்லி/லிட்டர்) அல்லது டைமெத்தோயேட் (2 மில்லி/லிட்டர்) தெளித்து பேன்களைக் கட்டுப்படுத்தலாம். கைத்தெளிப்பான் கொண்டு ஒட்டும் திரவம் கலந்து தெளிப்பதன் மூலம் பேன்களை நன்கு கட்டுப்படுத்தலாம்.

**ஊதா நிற இலைக்கருகல் நோய்:** நோய் தாக்கிய செடியின் இலை நுனிப்பகுதி வெளிர்பச்சையம் இழந்து, நீள்வட்ட வடிவிலான ஊதா நிறப்புள்ளிகள் தென்படும். இப்பகுதிகளில் கருமை நிறப்புள்ளிகள் வளையங்களாகத் தோன்றும். இப்புள்ளிகளே பூசண வித்துக்கள் உற்பத்தியாகும் இடமாகும். இப்புள்ளிகள் இலைகளின் கீழ்ப்பகுதிகளுக்கும் பரவி செடி முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி இலைகள் காய்ந்து, செடிகள் கருகி சருகு போலாகிவிடும்.

இந்நோயினைக் கட்டுப்படுத்த நோய் பாதிக்கப்படாத வயல்களிலிருந்து விதைவெங்காயம் தேர்வு செய்ய வேண்டும். விதை வெங்காயத்தினை பூசணக் கொல்லியான திரம் மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைப்பு செய்ய வேண்டும். வயலில் போதுமான அளவு வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். நோய் தாக்கப்பட்டு காய்ந்த இலைகளை கிள்ளியெறிந்து பின் கீழ்க்காணும் பூசணக்கொல்லி மரநந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

மான்கோசெப் 2 கிராம்/லிட்டர் தண்ணீர், சினப் 2 கிராம்/லிட்டர், குளோரோதலோனில் 2 கிராம்/லிட்டர், டைபோல்ட்டான் 2 கிராம்/லிட்டர், காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம்/லிட்டர். மேலே கூறப்பட்டுள்ள மருந்துகளைத் தெளிக்கும்போது இம்மருந்துகள் இலைகளின் மேல் நன்கு ஒட்டுவதற்காக ஒட்டு திரவம் (அல்லது) சோப்பு கரைசலை ஒரு லிட்டருக்கு 1 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். நோயின் தாக்குதலைப் பொறுத்து பூசணக்கொல்லி மருந்தினை 10 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை தெளித்து இந்நோயினைக் கட்டுப்படுத்தலாம். (தகவல்: கோ.கஜேந்திரன், த.தினகரன், கு.கதிரேசன், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டு, திருச்சி-9)

தினத்தந்தி DAILY THANTHI

**சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 22 லட்சம் டன்னாக உயர்வு**

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி 20 லட்சம் டன்னைத் தாண்டி உள்ளது. இதற்கு வளைகுடா நாடுகளில் தேவைப்பாடு அதிகரித்ததே காரணமாகும். மேலும் உள்நாட்டில் இதன் உற்பத்தியும் நன்றாக உள்ளது.

44 சதவீதம்

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் நம்நாட்டிலிருந்து 16 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி ஆகி உள்ளது. சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் இது 44 சதவீதம் அதிகரித்து 22 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

இதே நிதி ஆண்டுகளில் மதிப்பின் அடிப்படையில் இது 27 சதவீதம் அதிகரித்து ரூ.9,476 கோடியிலிருந்து ரூ.12,000 கோடியாக உயர்ந்துள்ளது.

பாசுமதி அரிசி ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு சென்ற 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இதற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றிற்கு 1,100 டாலரிலிருந்து 900 டாலராக குறைத்தது. இதனால் இந்திய நிறுவனங்களால் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் போட்டிகளை முறியடித்து, வெளிநாடுகளுக்கு குறைந்த விலையில் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய முடிந்தது.

பாகிஸ்தான் நாடு பாசுமதி அரிசி மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை ரத்து செய்துள்ளது. இந்நிலையிலும் நம்நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி அதிகரித்துள்ளது. இந்தியாவின் பாசுமதி அரிசியின் தரத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஈரான்

இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசியை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈரான் நாடு முதலிடத்தில் உள்ளது. மேலும் ஐக்கிய அரபு குடியரசு நாடுகள், சவுதி அரேபியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சென்ற நிதி ஆண்டில் வறட்சி நிலவி இருந்தபோதிலும், பாசுமதி அரிசி பயிரிடும் பரப்பளவு 30 சதவீதம் உயர்ந்துள்ளது. இதற்கு குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுகிறது. இதனையடுத்து சென்ற ஆண்டின் கரீஃப் பருவத்தில் ஹரியானா, பஞ்சாப், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் பாசுமதி நெல்லை அதிக அளவில் பயிரிட்டுள்ளனர்.

பருவமழை

நடப்பு நிதி ஆண்டில் பருவமழை நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இந்த நிதி ஆண்டிலும் பாசுமதி அரிசி ஏற்றுமதி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சாதாரண அரிசி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதனால்தான் பாசுமதி அரிசி ஏற்றுமதி அதிகரித்துள்ள நிலையிலும், ஒட்டு மொத்தத்தில் அரிசி ஏற்றுமதி வளர்ச்சி குறைந்துள்ளது என வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

**உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு சர்க்கரை இறக்குமதி மீது வரி விதிக்க திட்டம் இல்லை**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி



சர்க்கரை இறக்குமதி மீது வரி விதிக்க தற்போது திட்டம் இல்லை என மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

தேவைப்பாடு

உள்நாட்டில் சர்க்கரைக்கான தேவைப்பாடு அதிகமாக உள்ளது. அதேசமயம் இதனை ஈடுகட்டும் அளவிற்கு உற்பத்தி இல்லை. மேலும் சர்வதேச சந்தையில் சர்க்கரையின் விலை அதிகமாக உள்ளது. இதுபோன்ற காரணங்களால் சர்க்கரை இறக்குமதி மீது வரி விதிப்பது குறித்து 10–15 நாள்களுக்கு பிறகு தான் முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.
சென்ற மாதம், உள்நாட்டு சர்க்கரை தயாரிப்பு நிறுவனங்கள், சர்க்கரையின் விலை குறைந்து உள்ளதால் இறக்குமதி செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் மூலச்சர்க்கரை மீது குறைந்தபட்சம் 40 சதவீதம் வரி விதிக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தன. ஆனால் மத்திய அரசு, உள்நாட்டில் சர்க்கரையின் விலை எதிர்பார்த்த அளவிற்கு குறையவில்லை என்ற நிலைப்பாட்டால் இதன் மீது வரி விதிப்பது குறித்த திட்டத்தை ஒத்தி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.
நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ சர்க்கரையின் விலை ரூ.50 என்ற அளவில் மிகவும் அதிகரித்து இருந்தது. இதனை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில் மத்திய அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்போது டெல்லி சந்தையில் ஒரு கிலோ சர்க்கரையின் விலை 32–33 என்ற அளவில் உள்ளது. உள்நாட்டில் போதிய அளவிற்கு சர்க்கரை கிடைக்க வேண்டும் என்ற காரணத்தால் மத்திய அரசு சுத்திகரிக்கப்பட்ட மற்றும் மூலச் சர்க்கரை மீதான தீர்வையை விலக்கிக் கொண்டது. இது, இவ்வாண்டு டிசம்பர் மாதம் இறுதி வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி

சென்ற 2009–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இதுவரையிலுமாக நம்நாடு 60 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்துள்ளது. தற்போதைய நிலையில் உள்நாட்டில் ஆண்டுக்கு 2.30 கோடி டன் சர்க்கரை தேவைப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
நடப்பு ஜூன் மாத தொடக்கத்தில் சர்வதேச சந்தையில் ஒரு டன் சர்க்கரையின் விலை 485 டாலராக இருந்தது. இது, தற்போது 500 டாலராக உயர்ந்துள்ளது.
சென்ற திங்கள்கிழமை அன்று நடைபெற்ற மத்திய அமைச்சர்களின் சிறப்பு குழு கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

---

**இயற்கை ரப்பரின் விலை உயர்ந்துள்ள நிலையிலும் டயர் தயாரிப்பு நிறுவனங்களின் நிகர**

*லாபம் 63 சதவீதம் வளர்ச்சி*

*சிகா சர்மா*
*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*
*இயற்கை ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையிலும் சென்ற நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் அப்பல்லோ டயர்ஸ், எம்.ஆர்.எஃப் மற்றும் சியெட் உள்ளிட்ட முன்னணி ஆறு டயர் தயாரிப்பு நிறுவனங்கள் ஈட்டிய ஒட்டுமொத்த நிகர லாபம் சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டைக் காட்டிலும் 63 சதவீதம் உயர்ந்துள்ளது. இது, இந்நிறுவனங்களின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது.*
*வர்த்தக வாகனங்கள்*
*நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் வர்த்தக வாகனங்கள் மற்றும் கார்கள் விற்பனை மிகவும் அதிகரித்து வருகிறது. டிரக்குகள் விற்பனையிலும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் டயர்கள் விற்பனை அதிகரித்து வருகிறது இதனையடுத்து இதே காலாண்டுகளில் இந்நிறுவனங்களின் வருவாய், 25 சதவீதம் உயர்ந்துள்ளது.*
*முந்தைய நிதி ஆண்டின் நான்காவது காலாண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது இந்த வளர்ச்சி விகிதம் நான்கு மடங்கு அதிகமாகும்.*
*சென்ற நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடும்போதும் வருவாய் 10 சதவீதம் அதிகரித்துள்ளது. இத்துறை நிறுவனங்களின் வருவாய் இதுவரை கண்டிராத வகையில் அதிகரித்துள்ளதாக வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.*
*டயர் நிறுவனங்களின் மொத்த வருவாயில் சில்லரை வர்த்தகத்தின் பங்களிப்பு 75 சதவீதமாக உள்ளது. நிறுவனங்களுக்கு டயர்களை நேரடியாக விற்பனை செய்தல் வாயிலாக ஈட்டப்படும் வருவாய் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் பங்களிப்பு மொத்தம் 25 சதவீதமாக உள்ளது.*
*மூலப்பொருள்*
*டயர் தயாரிப்பில் ரப்பர் முக்கிய மூலப்பொருளாக உள்ளது. இந்நிலையில் இதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, இந்நிறுவனங்களுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. ஒரு கிலோ ரப்பர் விலை இரண்டு மடங்கு அதிகரித்து ரூ.140–ஆக உயர்ந்துள்ளது. டயர் தயாரிப்பு நிறுவனங்களின் செயல்பாட்டு செலவில் ரப்பருக்கான செலவினம் மட்டும் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.*
*இந்நிலையிலும், இந்நிறுவனங்களின் வருவாய் 25 சதவீதமும், நிகரலாபம் 63 சதவீதமும் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்களின் செயல்பாட்டு லாப வரம்பும் மிகவும் உயர்ந்துள்ளது. ரப்பரின் விலை அதிகரித்துள்ள நிலையிலும், வட்டிச் செலவினம் போன்ற இதர செலவினங்களை கட்டுக்குள் வைத்துள்ளதால், இந்நிறுவனங்களின் நிகர லாபம் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.*
*முதலீட்டாளர்கள்*
*இதுபோன்ற காரணங்களால் டயர் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதில் முதலீட்டாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். நடப்பு ஆண்டு ஜனவரி 1–ந் தேதியிலிருந்து இதுவரையிலுமாக 'சென்செக்ஸ்' 3 சதவீதம் சரிவடைந்துள்ள நிலையில், முன்னணி டயர் தயாரிப்பு நிறுவனங்களின் பங்குகள் விலையில் இரட்டை இலக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக இத்துறையைச் சேர்ந்த அப்பல்லோ டயர் நிறுவனத்தின் பங்குகள் விலை 32 சதவீதம் உயர்ந்துள்ளது.*

**விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு பெற கண்காணிப்பு பிரிவு தொடக்கம் அதிகாரி தகவல்**

*காஞ்சீபுரம், ஜூன்.16–*
*காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் பிரச்சினை தொடர்பாக புகார் தெரிவிக்க மற்றும் தொழில்நுட்ப தகவல்களை பெற கண்காணிப்பு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.*
*இது தொடர்பாக வேளாண்மை இணை இயக்குநர்(பொ) ஜெ.சேகர் வெளியிட்டுள்ள*

அறிக்கையில் கூறியிருப்பதாவது:–
உரம் கையிருப்பு
காஞ்சீபுரம் மாவட்டத்தில் சொர்ணவாரி பருவத்துக்கு தேவையான உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் தேவையான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
மேலும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகவோ, உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் தொடர்பான புகார்களை தெரிவிக்க வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பு பிரிவு(அறை) தொடங்கப்பட்டுள்ளது. காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தினமும் வேலை நாட்களில் இப்பிரிவு செயல்படும்.
தொடர்பு கொள்வது எங்கே?
இந்த அறையில் காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகள்தொழில் நுட்பம் தொடர்பான விளக் கங்களை பெறலாம். கண்காணிப்பு அறை எண்: 044–27222977, உதவி இயக்குநர்கள் சிறுகாவேரிபாக்கம்–27296845, வாலாஜாபாத்–27256760, உத்திரமேரூர்–27272501, காட்டாங்கொளத்தூர்–27426861, திருக்கழுக்குன்றம்– 274481881, திருப்போரூர்–27445233, மதுராந்தகம்–27552304, அச்சிறுப்பாக்கம்–27523411, சித்தாமூர்– 27544485, பவுஞ்சூர்– 27539639, ஸ்ரீபெரும்புதூர்– 27162233, படப்பை–27174401, சிட்லபாக்கம்–22236325 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.
கருத்தரங்கு
தோட்டக்கலை துறை மற்றும் நீட்ஸ் தொண்டு நிறுவனம் ஆகியவை சார்பில், விவசாயிகளுக்கான சிறப்பு கருத்தரங்கம் காஞ்சீபுரத்தில் நடந்தது. நபார்டு வங்கு துணை பொது மேலாளர் சுதாகர் கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.
இதில் சென்னை தோட்டக்கலைத் துறை மேலாண்மை இயக்குநர் சேகர்ஜேம்ஸ் கலந்து கொண்டு சொட்டுநீர் பாசனம், நீரை சேமிப்பது, நீரின் பயன்பாடு ஆகியவை குறித்து பேசினார். தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். நீட்ஸ் தொண்டு நிறுவன இயக்குநர் கோபாலகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் எழில்பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் 350–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



### 4 முறை முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்த

# பெட்டைக்கோழி சேவலாக மாறிய அதிசயம்

## தினமும் அதிகாலையில் கூவுவதை வேடிக்கை பார்க்கிறார்கள் கிராம மக்கள்

திருச்சி, ஜூன்.16-

திருச்சி அருகே 4 முறை முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்த பெட்டைக்கோழி திடீர் என சேவல் போல் மாறியது. இந்த அதிசய சேவல் கூவுவதை கிராம மக்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.

**துவாக்குடி அருகே மேலப்பட்டி**

திருச்சி மாவட்டம் துவாக்குடியில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது மேலப்பட்டி கிராமம். தொழிற்சாலைகள், பாய்லர் ஆலைக்கு தேவையான உதிரிபாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் என வரிசையாக அமைந்துள்ளதை தாண்டினால் வயல் வெளிகள், தென்னை, மா மரங்கள், மானாவரி பயிர்கள் நிறைந்து முற்றிலும் விவசாய பூமியாக காட்சி அளிக்கும் இந்த கிராமத்தில் மளிகை கடை நடத்தி வருபவர்கள் மார்ட்டின்- சிசிலியா மேரி தம்பதியினர்.

**சேவலாக மாறிய பெட்டைக்கோழி**

இந்த தம்பதியினர் கிராமத்து சூழ்நிலைக்கு ஏற்ப தங்களது வீட்டில் ஏராளமான நாட்டுக்கோழிகளையும் வளர்த்து வருகிறார்கள். இப்படி இவர்கள் வளர்த்து வருவதில் ஒரு பெட்டைக்கோழி திடீர் என சேவல் போல் உருவ மாற்றத்தை பெற்று வந்தது. பொதுவாக சேவலுக்கு தான் தலையில் கொண்டை இருக்கும். கடந்த மாதம் வரை கொண்டையே இல்லாமல் இருந்து வந்த இந்த கறுப்பு நிற கோழிக்கு திடீர் என தலையில் சிவப்பு நிறத்தில் கொண்டை வளர்ந்து சேவல் போல் மாறியதை பார்த்து மார்ட்டின் மட்டும் அல்ல அந்த கிராம மக்களில் பலரும் ஆச்சரியம் அடைந்தார்கள். திடீர் என பரிணாம வளர்ச்சி பெற்ற இந்த பெட்டைக்கோழி சேவலை போல் தினமும் அதிகாலை நேரத்தில் எழுந்து மற்ற சேவல்களை போல் இறக்கையை விரித்து கூவுகிறது.

**அதிசயம்**

இந்த அதிசய கோழி பற்றி மார்ட்டினின்



மனைவி சிசிலியா மேரி கூறியதாவது:-

"நாங்கள் பல ஆண்டுகளாக கோழிகள் வளர்த்து வருகிறோம். சேவலாக மாறிய இந்த பெட்டைக்கோழியை நாங்கள் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக எங்கள் ஊர் அந்தோணியார் கோவிலில் விடப்பட்ட ஏலத்தில் வெட குஞ்சு பருவத்தில் வாங்கினோம். நன்றாக வளர்ந்த இந்த கோழி சரியான பருவத்தை அடைந்ததும் 4 முறை முட்டையிட்டு அடைகாத்து குஞ்சுகள் பொரித்தது. இந்த நிலையில் கடந்த 20 நாட்களாக இந்த கோழியின் நடவடிக்கைகளில் திடீர் மாற்றத்தை உணர்ந்தோம். தலையில் கொண்டை முளைத்ததோடு சேவலை போலவே தினமும் நன்றாக கூவுகிறது. முன்பெல்லாம் சேவலை கண்டால் பயந்து ஓடும் இந்த கோழி தற்போது மற்ற சேவல்களிடம் சண்டை போட்டு மல்லுக்கு நிற்கிறது. அத்துடன் 4-வது முறையாக முட்டையிட்டு பொரித்த குஞ்சுகள் பெரிய அளவில் ஆன பின்னரும் அவற்றை தன்னுடன் சேர்த்து கொண்டு மேய்ச்சலுக்கு செல்கிறது. வழக்கமாக இந்த கால கட்டத்தில் முட்டையிட வேண்டிய இந்த கோழியிடம் அதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படாமல் போனதால் தான் நாங்கள் இது முற்றிலுமாக சேவலாக மாறிவிட்டதே என ஆச்சரியப்படுகிறோம்

இவ்வாறு அவர் கூறினார்.

**பாலின மாற்றம்**

கிராமத்து குப்பை மேட்டில் எப்போதும் போல் மேய்ந்து வரும் இந்த கறுப்பு கோழி உருவ மாற்றத்தின் காரணமாக பலரின் கண்களுக்கு காட்சி பொருளாகி விட்டது. பறவையினத்தில் இதுபோன்ற ஒரு பாலின மாற்றம் விஞ்ஞான ரீதியாக சாத்தியம் தானா? என்ற கேள்வி ஒரு புறம் இருந்தாலும் மாற்றங்களுக்கு உட்பட்ட இந்த கலியுகத்தில் தினமும் எத்தனையோ அதிசயங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அது போன்ற ஒரு அதிசயம் தான் இதுவும் என அந்த கோழியை பார்த்து வியப்பாக பேசுகிறார்கள் மேலப்பட்டி கிராம மக்கள்.